# சொல்லின் முதலில், இடையில், இறுதியில் வரும் எழுத்துகள்.

உயிரெழுத்துகள் சொற்களின் முதலெழுத்தாக மட்டுமே வரும். சொல்லின் இடையிலும், கடையிலும் வாரா. அளபெடையில் மட்டும இடையிலும், கடையிலும் வரும் (வரூஉம், குரீஇ)

மெய்யெழுத்துகள் சொற்களின் முதலாக வாரா. சொற்களின் இடையிலும் கடையிலும் வரும்.

உயிர்மெய் எழுத்துகள் சொற்களின் முதல், இடை, கடை ஆகிய மூன்று இடங்களிலும் வரும்.

ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.

ய், ர், ழ் என்னும் மூன்று மெய்யெழுத்துகளை ஒட்டியே மற்றொரு மெய்யெழுத்து வரலாம்.

(சரியான சொற்கள் - வாய்க்கால், பார்த்தான், வாழ்க்கை)

ட், ல், ள், ற் மெய்யெழுத்துகளுக்குப் பிறகு மெய்யெழுத்துகள் வாரா. வந்தால் பிழையானவை.

(பிழையான சொற்கள் - காட்ச்சி, பல்த்தேய்த்தேன், கேள்க்கிறேன், கற்க்க)

**பிழை எண் 1**

**எந்த எழுத்து எங்கு வரும் என்று தெரியாததால் வரும் பிழை.**

உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர் மெய்யெழுத்து, ஆய்த எழுத்து ஆகிய எழுத்துகள் சொல்லில் எங்கு வரும் என்ற விளக்கம் மேலே உள்ளது. இந்த விதியை மீறிய வகையில் எழுத்துகள் சொற்களில் இருந்தால் அவை பிழையான சொற்கள் என்று அறியலாம். பிழை அறிந்து, தவிர்க்க முயற்சி செய்யவும்.

**பிழை எண் 2**

**எழுத்துகளை ஒலிப்பது பிழையானால் எழுதுவதும் பிழையாகும்.**

ர, ற இரண்டு எழுத்துகளும் - ந, ன, ண மூன்று எழுத்துகளும் - ல, ள, ழ மூன்று எழுத்துகளும் சரியாக ஒலிக்கப்பட வேண்டும். பிழையாக ஒலித்தால் எழுதுபவரும் பிழையாகவே எழுதுவார்கள்.

தரம், தறம் - மரம், மறம் - நிறம், நிரம் - வருவல், வறுவல் - குரை, குறை - மரி, மறி - அரிப்பு, அறிப்பு.

நல்ல, னல்ல - மண், மன் - மனம், மணம் - மணி, மனி - பானை, பாணை - தண்ணீர், தன்னீர்.

பல, பள, பழ - மலை, மளை, மழை - பலி, பளி, பழி - அளி, அலி, அழி - வாலை, வாளை, வாழை

இரண்டு சொற்களிலும் எழுத்துகள் வேறுபட்டாலும், இரண்டின் ஒலிப்பும் ஒன்றுபோலவே ஒலிப்பதால் இவை மயங்கொலிச் சொற்கள் என அழைக்கப்படுகின்றன. மயங்கெலிச் சொற்களால் வரும் பிழைகள் மிகவும் அதிகம். எனவே சொற்களில் உள்ள எழுத்துகளையும் சொல்லின் பொருளையும் நெஞ்சில் நிறுத்திப் பிழைகளைத் தவிர்க்க முயற்சி செய்யவும்.

# எழுத்துகளை ஒலிக்கும் முறை

( ஒலிக்கும் நேரம் = மாத்திரை = கண் இமைத்தல் நேரம் = கைநொடித்தல் நேரம்)

(ஒரு மாத்திரை என்பது இயல்பாகக் கண் இமைத்தல் அல்லது கை நொடித்தல் நேரம் ஆகும்)

குறில் எழுத்துகள் (அ, இ, உ, எ, ஒ) ஒலிக்கும் நேரம் = 1 மாத்திரை

( ஒலித்துப் பழகுக = க, கி, கு, கெ, கொ - ச, வி, நு, டெ, பொ )

( ஒலித்துப் பழகுக = அது, இது, உன், என், ஒரு, )

( ஒலித்துப் பழகுக = கண், கிளி, குளி, கெட, கொடி )

குறில் எழுத்துகள் இயல்பாகக் கண் இமைக்கும் நேர அளவே ஒலிப்பதைக் கவனிக்கவும்.

அதாவது 1 மாத்திரை அளவே ஒலிக்கின்றன.

அ, இ, உ, எ, ஒ என்கிற உயிர் எழுத்துகளும் அதன் வழியாகப் பிறக்கிற உயிர் மெய் எழுத்துகளும் 1 மாத்திரை அளவே ஒலிக்கும்.

நெடில் எழுத்துகள் (ஆ, ஈ, ஊ, ஐ, ஏ, ஓ, ஔ) ஒலிக்கும் நேரம் = 2 மாத்திரைகள்

( ஒலித்துப் பழகுக = பா, பீ, பூ, பை, பே, போ, பௌ )

( ஒலித்துப் பழகுக = பா, கீ, கூ, தை, கே, கோ, கௌ )

( ஒலித்துப் பழகுக = ஆடு, ஈட்டி, ஊட்டம், ஐவர், ஏணி, ஓடம், ஔவை )

( ஒலித்துப் பழகுக = காடு, தீமை, பையில், பூனை, தேடு, கோடு, கௌதாரி )

( ஒலித்துப் பழகுக = ப, பா - த, தா - எ, ஏ - ச, ஜ ) - குறில் நெடில் வேறுபாடு தெரிகிறதா ?

( ஒலித்துப் பழகுக = படு, பாடு - கொடு, கோடு - எடு, ஏடு - பந்து, ஐந்து - மலை, மாலை )

மெய் எழுத்துகள் ஒலிக்கும் நேரம் = 1/2 மாத்திரை

( ஒலித்துப் பழகுக = சக்கரம், பந்து, கன்னி, செக்கு, பாட்டு, ஆந்தை, கொக்கு, பூட்டு, வட்டி, நொண்டி )

ஆய்த எழுத்து ஒலிக்கும் நேரம் = 1/2 மாத்திரை

( ஒலித்துப் பழகுக = அஃது, எஃகு, இஃது, கஃசு )

**நினைவில் நிறுத்துக.**

குறில் எழுத்துகள் (அ, இ, உ, எ, ஒ) = 1 மாத்திரை,

நெடில் எழுத்துகள் (ஆ, ஈ, ஊ, ஐ, ஏ, ஓ, ஔ) = 2 மாத்திரைகள்,

மெய் எழுத்துகள் = 1/2 மாத்திரை,

ஆய்த எழுத்து = 1/2 மாத்திரை

**பிழை எண் 3**

**குறில் நெடில் வேறுபாடு தெரியாமல் எழுத்துகளை ஒலிப்பதில் ஏற்படுகிற பிழை.**

குறிலை நெடிலாகவும், நெடிலை குறிலாகவும் ஒலித்துப் பழகினால், எழுத்துகளை எழுதும் பொழுது பிழை வரும். எ, ஏ - கெ, கே - ஒ, ஓ - கொ, கோ - வரிசை எழுத்துகளை எழுதும் பொழுது மாணவர்கள் அதிகமாகப் பிழை செய்கிறார்கள். எனவே குறில் நெடில் எழுத்துகளைச் சரியாக ஒலித்துப் பழவும். குறில் நெடில் எழுத்துகளை எப்படி எழுதுவது என்பதையும் உள்வாங்கவும்.

ல, ள, ழ - ர, ற - ந, ன, ண - எழுத்துகளை ஒலிப்பதில் பலருக்கும் சிக்கல் ஏற்படுகிறது. இந்த எழுத்துகளை எப்படித் திருத்தமாக ஒலிப்பது என்று இப்பொழுது காண்போம்.

மூச்சுக்குழலிலிருந்து மேல் எழும்பும் மூச்சுக் காற்றை வாய்வழியாகச் செலுத்தி உதடு, நாக்கு, மேல் அண்ணம், பல் ஆகிய உறுப்புகளைப் பயன்படுத்தி பல்வேறு ஒலிகளை நாம் எழுப்புகிறோம். எழுத்துக்களைச் சரியாக ஒலிக்க, மேலே குறிப்பிட்டுள்ள உறுப்புகளைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

*கண்ணாடி முன்நின்று நீங்கள் ஒலித்துப்பழகுங்கள்!*

நுனி நாக்கால் மேலண்ணத்தைத் தொடும் போதும், தடவும் போதும் , அதற்கு அடுத்த (உள் அண்ணத்தை) பகுதியைத் தொடும் போதும், தடவும் போதும் காற்றை வெளியேற்றி ஒலிகளை எழுப்பவும்.

மேலண்ணத்தில் மூன்று இடங்கள் முதன்மையானவை. கீழுள்ள படத்தில் மூன்று நிறப் புள்ளிகளைப் பார்க்கவும், (சிவப்பு, நீலம், பச்சை). சிவப்புப் புள்ளி மேல் பற்களுக்கு ஒட்டிய பகுதி. நீலப் புள்ளி மேலண்ணத்தின் நடுப்பகுதி ( **நடு அண்ணம்** ). பச்சைப் புள்ளி அதற்குப் பின் உள்ள பகுதி ( **உள் அண்ணம்** ) என்று வைத்துக் கொள்வோம்.



கீழுள்ள படத்தைப் பார்த்து மேலண்ணத்தில் உள்ள இந்தப் புள்ளிகளைக் கற்பனையாக நினைவில் நிறுத்தவும். நுனி நாக்கினால் இந்தப் புள்ளிகளைத் தொட்டுப்பழகவும்! நாக்கை மடித்து, காற்றை வெளிப்படுத்தி நுனி நாக்கால் பின்னிருந்து முன்பாக (பச்சையிலிருந்து நீலம், சிவப்பு வரை ) தடவிப்பழகவும்!



நாக்கு பல்லின் பின் பகுதியில் சிவப்புப் புள்ளியில் தொடுதல்



நாக்கு மேலண்ணத்தின் நடுப் பகுதியில் நீலப் புள்ளியில் தொடுதல்



நாக்கு மடிந்து பச்சைப் புள்ளியிலிருந்து நீலப் புள்ளிவரை தடவுதல்

**படத்தில் உள்ளது போல நாக்கை மூன்று நிலைகளிலும் கண்ணாடி முன் நின்று ஒலித்துப் பழகுக.**

இப்பொழுது ஒலித்துப் பழகுவோம்.




**ல** - மேல் வாய்ப் பல்லின் அடியை நாவின் ஓரம் தடித்துப் பொருந்தும். மேல் வாய் பல்லின் உட்பகுதியை நுனி நா இலேசாகப் பொருந்தும். அப்பொழுது ல வரும். ( பல, பல், சில, தல, நல்ல, நிலா )

**ந** - மேல் வாய்ப் பல்லின் அடியை நா நுனி பொருந்தலால் (தந்நகரம்) ந பிறக்கும். ( நண்டு, நகம், தந்தம்)

**ர** - மேல்வாயை, நாக்கின் நுனியானது தடவ **ர** வரும் அதாவது நாவின் நுனி, அண்ணத்தின் நுனியை மேல்வாய்ப் பற்களுக்கு மேலே (மேடான பகுதி (ஈறு) மெல்ல தடவினால் **ர** வரும். ( மரம், பிரதி, பார்வை, தரம் )

**ன** - மேல் வாயை, நுனி நாக்கு மிகப் பொருந்தும், நுனி நா மேல்வாய் முன்பற்களுக்கு மேல் பொருந்தும். அப்போது **ன** (றன்னகரம்) பிறக்கும். ( என, வினை, பனை, தினை, மனம், )

**ற** - நுனி நா நுனி அண்ணத்தைத் தடவினால் ர (இடையின ர) வரும் என்பதைப் பார்த்தோம். ஆனால், நுனி நா, நுனி அண்ணத்தை அல்லது அதற்குச் சிறிது மேல் பகுதியை நன்றாகப் பொருந்தி வன்மையாக - பலமாக, படபடப்பது போல (அதாவது உதறுவது போலச்) செய்தால் அப்போது வல்லின **ற** வரும். ( பறவை, மற, கற்ற, விற்றல், நற நற )

**ள** - மேல் வாயை, நாவின் ஓரம்தடித்து, நா நுனி சற்று மேல் நோக்கி வளைந்து அண்ணத்தின் நடுப்பக்கத்தைத் தடவுதலால். **ள** வரும். (கள், கள, பள்ளம், வளம், தள்ள)

**ண** - நுனி நா, மேல் வாய் நுனியைச் சேர்தலால் **ண** (டண்ணகரம்) பிறக்கும். ( கண், மண், மணம், மணி )

**ழ** - மேல் வாயை (உள் நாவின் அருகில்) நாவின் நுனி மேல் நோக்கி வளைந்து வருடலால் **ழ** வரும். ( பழம், பழுத்த, பழமை, வாழை, கழகம், மழை, வழி, வாழ்க்கை )

**ங** - தொண்டைப்பகுதியில் உள்ள நாக்கை, அடி அண்ணத்தில் பொருத்தி **ங** ஒலிக்கவும். ( எங்கே, கங்கை )

**ஞ** - நாக்கின் நடுப்பகுதியை மேலண்ணத்தில் பொருத்தியவாறு **ஞ** ஒலிக்கவும். (இவ்வெழுத்தை ஒலிக்கும் போது காற்று மூக்கின் வழியே வெளியேறும்) ஞாலம், ஞமலி, ஞாயிறு

( ஒலித்துப் பழகுக = ல, ள, ழ – ர, ற – ந, ன, ண )

( ஒலித்துப் பழகுக = லட்டு, பல, சில, கலகல, நல்ல, தோல், வால் )

( ஒலித்துப் பழகுக = பளபள, பள்ளி, தளம், தள்ள, தேள், வாள் )

( ஒலித்துப் பழகுக = பழம், மழை, வாழை, வழவழ, கழகம், வழி )

( ஒலித்துப் பழகுக = மரம், கரம், வரம், நரி, நரை, கரை, வராத, போர் )

( ஒலித்துப் பழகுக = நிறம், புறம், திறம், குறி, பாறை, புறா, கற்ற, மற்ற )

( ஒலித்துப் பழகுக = நல்ல, நகை, நாள், நிலை, நீளம், நீலம், நடிகன் )

( ஒலித்துப் பழகுக = மனம், வனம், மனிதன், கனிவு, மன்னன், சென்னை )

( ஒலித்துப் பழகுக = மணம், பணம், மண், தண்ணீர், கண்ணாடி, துணி வணிகம் )

**ஒலித்துப் பழகுக = பல, பள்ளி, பழம், வெந்நீர், பன்னீர், தண்ணீர், மரம், பறவை, கற்றல்**